1975 அக்டோபர் 24]

முறைக்குக் கொண்டு வருமானால், அதை இந்தத் தமிழ் நாடு அரசு வரவேற்கும். ஆனால் அந்த ஆலோசனைகள் எல்லாம் பேசப்பட்டு, அவை ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றுதான் நான் அறிந்திருக்கிறேன்.

Paddy Merchants charged with hoarding.

*9 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether paddy merchants charged with hoarding were handcuffed and paraded in the streets of some towns in Madurai District between 18th and 25th December, 1974;

(*b*) if so, the offences with which they were charged; and

(*c*) the provisions of law under which such action was taken against them?

பதுக்கல் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நெல் வணிகர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், 1974 டிசம்பர் திங்கள் 18-க்கும் 25-க்கும் இடைப்பட்ட நாட்களில் பதுக்கல் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நெல் வணிகர்கள், விலங்கிட்டு தெருக்கள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்கள்மீது சாட்டப்பட்ட குற்றங்கள் யாவை?

(உ) சட்டத்தின் எந்த விதித்துறைகளின்கீழ் அவர்கள் மீது அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) & (உ) அரிசியைப் பதுக்கி, கள்ளத்தனமாக கேரளாவிற்குக் கடத்திச் செல்வது போன்ற நடவடிக்கைகளில் வழக்கமாக ஈடுபட்டு வந்தனர். 1971 ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 26/1971) விதித்துறைகளின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

THIRU A. R. DAMODARAN: Sir, the question is whether these people were handcuffed and paraded in the streets of some towns. May I know, Sir, whether this was done by the police

and whether any instructions had been given by the Government that such a punishment should be meted out even before the persons were convicted by a Court of Law?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லும்போது, விலங்கு மாட்டுவது குறித்து சில பிரிவுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சமுதாயக் குற்றங்களுக்கு, விலங்கு மாட்டுவதிலே தவறு இல்லை என்றுதான் கருதுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: The objection is not to the handcuffing of criminals and even the hoarders and persons who have committed these offences after they are found guilty. The Penal Code may be amended and they can be handcuffed and made to walk 5 miles parading before millions. We have no objection to that. The point is: When a person is arrested on some charge, is it a responsible act on behalf of the Government Officials to parade these people before they are charged before a Court of Law?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைது செய்யப்பட்டாலே குற்றவாளி என்று நிரூபிப்பதற்கு முன்னாலேதான், கைது செய்யப்படும்போது, விலங்கு மாட்டலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. இதைப்போன்ற குற்றவாளிகளுக்கு விலங்கு மாட்டலாம் என்பதை இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது.

Appointment of Director of Prosecutions.

* 10 *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint a Director of Prosecutions for the State; and

(*b*) if so, the stage at which the matter now stands?

குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் நியமனம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்திற்கு குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?